# 9

# "நியாயத்தீர்ப்பின் நாளுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?"

## (2:1-16)

பலருக்கு நன்கு பழக்கமான பழைய பாடல் ஒன்று பின்வருமாறு அறிவிக்கிறது,

*மகாநாள் ஒன்று வருகிறது,*
*மகா நாள் ஒன்று வருகிறது,*
*மகாநாள் ஒன்று நெருங்கி நெருங்கி வருகிறது;*
*அப்பொழுது பரிசுத்தவான்களும் பாவிகளும்*
*வலது இடது புறமாகப் பிரிக்கப்படுவாரே,*
*அந்த நாளின் வருகைக்கு நீ ஆயத்தமாயிருக்கிறாயா?*
*நீ ஆயத்தமாயிருக்கிறாயா? நீ ஆயத்தமாயிருக்கிறாயா?*
*நியாயத்தீர்ப்பின் நாளுக்கு நீ ஆயத்தமாயிருக்கிறாயா?*[1]

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற[து]" என்று கூறினார் (எபிரெயர் 9:27). அத்தேனே பட்டணத்தில் இருந்த தத்துவஞானிகளிடத்தில் பவுல், தேவன் "ஒரு நாளைக் குறித்திருக்கிறார், அதிலே அவர் ... பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்" என்று கூறினார் (நடபடிகள் 17:31அ). அவர், "நாம் யாவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக நிற்க வேண்டும்" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 5:10ஆ). நீதி கையளிக்கப்பட்டு தவறுகள் யாவும் நேர்ப்படுத்தப்படும் அந்த உச்சகட்டமான நாளை நோக்கி வரலாறு தயக்கமின்றி நகர்ந்துகொண்டிருக்கிறது. அந்த நாளுக்கு நீங்கள் *ஆயத்தமாயிருக்கிறீர்களா?*

இந்தப் பாடம் ரோமர் 2ம் அதிகாரத்தின் முதல்பகுதியின்மீது கவனம்குவிக்கிறது. இந்த அதிகாரத்தில் பவுல், புறஜாதியார்களைப் போன்றே யூதர்களும் தங்கள் பாவங்களில் இழந்துபோகப்பட்டிருந்தனர் என்று காண்பிக்க யூதர்களின் பக்கமாய்த் தமது கவனத்தைத் திருப்பினார். முதல் பதினாறு வசனங்களில் அவரது குறிப்புரைகள், வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு

என்ற கருத்தைச் சுற்றிச்சுழலுகின்றன. 1ம் அதிகாரம், தேவபக்தியற்ற மக்களுக்கு எதிராகத் தேவகோபம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது என்பதைக் கூறிற்று (1:18); ஆனால் 2ம் அதிகாரம் வரவிருக்கும் கோபத்தை வலியுறுத்துகிறது (2:5) - "தேவன் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக்குறித்து நியாயத்தீர்ப்பு கொடுக்கும் நாளிலே ..." (2:16). நமது வசனப்பகுதியை நாம் படிக்கையில். தேவனுடைய நியாயத்தீர்ப்பின் அடிப்படைக் கொள்கைகளை நாம் கண்டறிவோம்.

## நியாயத்தீர்ப்பு தப்பிக்க இயலாததாக உள்ளது![2] (2:1-5)

**தேவன் நீதியின்படியே நியாயந்தீர்ப்பார் (வசனங்கள் 1-3)**

முந்திய பாடத்தில், நாம் புஜாதியார்களை யூதர்கள் எந்தப்பாவங்களினிமித்தம் கண்டனம் செய்தார்களோ, அதே பாவங்களை அவர்களும் செய்தனர் என்று குறிப்பிட்டு, 1 முதல் 3 வரையிலான வசனங்களைப் பற்றிப் படித்தோம் (வசனங்கள் 21, 22ஐக் காணவும்). இவ்விதமாகப் பவுல், "ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக்குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்" என்று கூறினார் (வசனம் 1). இன்னொருவருடைய வாழ்வில் உள்ள பாவங்களைக் காண்பது மிகவும் சுலபமாக உள்ளது. அதையே ஒருவர் தமக்குள் இருப்பதைக் காணுதல் என்பது மிகவும் கடினமாக உள்ளது![3]

பின்பு பவுல், "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம்[4]" (வசனம் 2) என்றார். கிரேக்க வசனத்தில் "தேவனுடைய நியாயத்தீர்ப்பு [*krina*] சத்தியத்தின் [*aletheia*] படியே [*kata*] இருக்கிறது"[5] என்று நேரடியாக உள்ளது. D. ஸ்டுவார்ட் பிரிஸ்கோ என்பவர், நியாயமான விசாரணையொன்று இருக்கும் என்று நாம் யாவரும் நிச்சயித்திருக்க முடியும் என்று பின்வருமாறு எழுதினார்:

> தேவனுடைய நியாயத்தீர்ப்பு முதலாவதாக, தேவன்தாமே சத்தியமாக இருக்கிறார், எனவே அது முற்றிலும் முன்தப்பெண்ணம் எதுவுமற்றதாக இருக்கும் என்ற வகையில் சத்தியத்தின் வழிமுறையுடன் தொடர்புபடுத்தப்படும், மற்றும் இரண்டாவது சாட்சியமானது உண்மையானதாக இருக்கும், எனவே தவறான விசாரணை என்ற சிந்தனைகூட இருக்க முடியாது.
>
> ... [மனிதர்களின் நீதிமன்றங்களில் போலின்றி,] தேவனுடைய நீதிமன்றத்தில், தவறான புரிந்துகொள்ளுதலோ, தவறான பிரதிநிதித்துவப்படுத்துதலோ, நீதியைத் தவறாக எடுத்துச்செல்லுதலோ ... மற்றும் தவறுகள் எதுவுமோ இராது - யாவும் சத்தியத்தின்

படியானதாகவே இருக்கும்.[6]

பவுல், "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களைக் குற்றவாளி களென்று தீர்த்தும், அவைகளையே செய்கிறவனே, நீ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளலாமென்று நினைக்கிறாயோ?" என்று தொடர்ந்து வலியுறுத்தினார் (வசனம் 3). "செய்கிற*வனே*" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை ஆங்கிலத்தில் "man" என்றுள்ளது, இது கிரேக்க மொழியில் *anthropos* என்றுள்ளது, இது "பொதுவாக 'ஒரு மனிதனைக்' குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது."[7] பவுல், தவறான மனித நியாயத்தீர்ப்பை தவறாத தெய்வீக நியாயத்தீர்ப்புடன் நேர்மாறாக ஒப்பிட்டார் என்று சிலர் நினைக்கின்றனர். விஷயம் அவ்வாறு இருந்தாலும் இல்லாவிட்டாலும், அப்போஸ்தலரினால் முன் வைக்கப்பட்ட கேள்விக்குப் பதில் தெளிவாக உள்ளது: எவரொருவரும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்க இயலாது!

**மனம்வருந்தாதவர்களைத் தேவன் நியாயந்தீர்ப்பார் (வசனங்கள் 4, 5)**

பவுல் தமது குற்றச்சாட்டை 4ம் வசனத்தில் தொடர்ந்தார்: "அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ?" தேவன் யூதர்களுக்குக் காண்பித்திருந்த "சாந்தம்" (*chrestotes*) என்ற "ஐசுவரியத்தை" (*ploutos*) அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். தேவன், யூதர்களுடனான தமது உடன்படிக்கையில் தமது பங்கை நிறைவேற்றுவதில், அவர்களுக்கு ஆவிக்குரிய மற்றும் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களைப் பொழிந்திருந்தார். அதே வேளையில், அவர்கள் உடன்படிக்கையில் தங்கள் பங்கை நிறைவேற்றத் தவறியதில், அவர் சகிப்புத்தன்மை (*anoche*) மற்றும் பொறுமை (*makrothumia*) கொண்டிருந்தார்.

யூதமக்களின் பாவங்களுக்காக அவர்களை உடனடியாக மற்றும் அப்பொழுதே தண்டிப்பதற்குப் பதிலாக, தேவன் தமது தயவு அவர்களை "மனந்திரும்பும்படி" (*metanoia*) வழிநடத்தும் என்று நம்பிக்கைகொண்டு, அவர்களுக்கு நேரம் மற்றும் வாய்ப்பு ஆகியவற்றைக் கொடுத்திருந் தார். அவர்களோ கவலைக்குரிய வகையில், தேவனுடைய தயவை, தாங்கள் அவரது உடன்படிக்கையின் மக்களாக இருந்ததால் தங்களது பாவங்களை அவர் காணாமல் விட்டுவிட்டார் என்பதற்கு அடையாளமாக எடுத்துக்கொண்டிருந்தனர். மனம் வருந்துவதற்குப் பதிலாக அவர்கள் மனம் வருந்தாத நிலையில் பெருகலாயினர்.

யூதர்கள் விழுந்த பொறியில் விழுதல் என்பது சுலபமாக இருக்கிறது. ஒருவேளை யாரேனும் ஒருவர் தமது வருமானவரியைச் செலுத்தாமல் ஏய்க்கலாம் ... அல்லது இனம்பற்றிய நகைச்சுவையொன்றிற்குச் சிரிக்க லாம் ... அல்லது தமது சுவாசத்தின்கீழ் ஒரு சாபத்தை முணுமுணுக்கலாம் ... அல்லது இன்னொரு மனிதருடைய மனைவியின்மீது இச்சை கொள்ளலாம்.[8] அவர் இவற்றைச் செய்கிறார் - ஆனால் ஒன்றும் நேர்வதில்லை. அவரைத் தேவன் அந்த இடத்திலேயே அடித்து வீழ்த்துவதில்லை. பரலோகத்தில்

*இருந்து மின்னுகிற இடியெதுவும் இறங்கிவருவதில்லை. அதோடு அவர் தப்பித்துக் கொண்டதாகவும் அவர் தமக்கும் தேவனுக்கும் இடையில் எல்லாம் இன்னமும் சரியாக உள்ளதாக நினைத்து "அதைத் தொடர்ந்து செய்யலாம்" என்று எடுத்துக்கொள்வது சுலபமாக உள்ளது.*

*பவுல் செயல்விளைவில், தேவனுடைய சகிப்புத்தன்மையை அவர் ஏற்றுக்கொள்வதாகத் தவறாய் நினைத்துவிடக்கூடாது என்று நம் யாவரையும் எச்சரித்துக்கொண்டிருந்தார். நாம் மனந்திரும்ப தேவன் நமக்கு வாய்ப்புத் தருகிறார் என்பதே நாம் இன்னும் வாழவும் சுவாசிக்கவும் காரணமாக உள்ளது (2 பேதுரு 3:9ஐக் காணவும்). தேவனுடைய நற்தன்மையை நாம் பழிக்காதிருக்கும்படி எச்சரிக்கையாயிருப்போமாக (ரோமர் 2:4). மாறாக, நாம் தேவனுடைய அன்பின் வெளிப்பாட்டை நமது மனந்திரும்புதலைத் தூண்டுவதற்கு அனுமதிப்போமாக!*

*தேவனுடைய தயவுபற்றி யூதர்கள் முன்தப்பெண்ணம் கொண்டபோது அதன் விளைவு என்னவாக இருந்தது? அவர்களுக்குப் பவுல், "உன் மனக்கடினத்திற்கும் [sklerotes[9]], குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு[10] வெளிப்படும் கோபாக்கினை [orge] நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் [orge] குவித்துக்கொள்ளுகிறாயே" என்று கூறினார் (வசனம் 5). இந்தப் பாடம் "மகாநாள் ஒன்று வருகிறது" என்ற பாடலின் முதல் அடியுடன் தொடங்கிற்று. இதன் கடைசி பத்தியானது பின்வரும் ஆழ்ந்த பொருளுள்ள வார்த்தைகளைக் கொண்டுள்ளது.*

> *கவலையான நாள் ஒன்று வருகிறது,*
> *கவலையான நாள் ஒன்று வருகிறது,*
> *கவலையான நாள் ஒன்று நெருங்கி நெருங்கி வருகிறது;*
> *பாவி தனது அழிவைப்பற்றிக் கேள்விப்படுவார்,*
> *"உன்னைநான் அறியேன், அகன்றுபோ,"*
> *அந்த நாளின் வருகைக்கு நீ ஆயத்தமாயிருக்கிறாயா?*

*அந்த நாள் எப்போது வரும் என்பது நமக்குத் தெரியாது (மத்தேயு 24:36). அது வருகிறது - மற்றும் அது நேற்றைவிட இன்று வெகு அண்மையில் உள்ளது - என்பதை மாத்திரம் நாம் அறிகிறோம்!*

*கடின இருதயமும் மனம்வருந்தாத தன்மையும் கொண்டுள்ளவர்களுக்குக் காத்திருப்பது என்ன? அவர்கள் "கோபாக்கினை நாளிலே [தங்களுக்கு] கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறா[ர்கள்]" என்று பவுல் கூறியபோது, அவர் மனதில் உரைக்கும் பேச்சு உருவகம் ஒன்றைப் பயன்படுத்தினார். "குவித்துக்கொள்ளுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (thesaurizo என்ற) வார்த்தையானது சாதாரணமாக பொக்கிஷம் என்பதுடன் இணைவுகொண்டுள்ளது: எதிர்காலத் தேவைகளை எதிர்பார்த்து பொக்கிஷங்களைச் சேர்த்துவைத்தல். இருப்பினும் இவ்விஷயத்தில், மனந்திரும்பாதவர்கள் கோபாக்கினை நாளுக்கென்று சேர்த்து வைத்ததெல்லாம் இன்னும் அதிகமான கோபாக்கினையே. எதிர்காலத்திற்கென்று ஆயத்தமாயிருத்தல் பற்றிய சொல்விளக்கம்*

ஒன்றுள்ளது: "மழைநாளுக்கென்று சேர்த்துவைத்தல்." கோபாக்கினை நாளுக்கென்று கோபாக்கினையைக் குவித்துவைத்தல் என்பது, மழை நாளுக்கென்று ஒரு பெரிய பீப்பாய் நிறைய தண்ணீரைச் சேகரித்து வைத்தல் என்பதற்குத் தோராயமாகச் சமமானதாக உள்ளது. மனந்திரும்பாதவர்கள் செய்துகொண்டிருந்தது அழிவுள்ளது மாத்திரமல்ல, ஆனால் மதியீனமானதாயும் உள்ளது!

**தேவன் ஒவ்வொருரையும் நியாயந்தீர்ப்பார் (வசனம் 3)**

இவ்விதமாக, ரோமர் 2ன் முதல் ஐந்து வசனங்கள், நியாயந்தீர்ப்பவர் களையும் (வசனங்கள் 1-3), மனம் வருந்தாதவர்களையும் (வசனங்கள் 4, 5) தேவன் நியாயந்தீர்ப்பார் என்று அறிவிக்கிறது. தொடர்ந்து வரும் வசனங்களில், தேவன் "ஒவ்வொருவரையும்" (வசனம் 6), "ஒவ்வொரு ஆத்துமாவையும்" (வசனம் 9), "ஒவ்வொருவரையும்" (வசனம் 10), யூதர்களையும் புறஜாதியாரையும் (வசனங்கள் 10, 11) நியாயந்தீர்ப்பார் என்று பவுல் அறிவித்தார். இயேசு தமது நியாயாசனத்தில் இருக்கும்போது, "சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்" (மத்தேயு 25:32). "மரித்தோராகிய சிறியோரும் பெரியோரும்" சிங்காசனத்திற்கு முன்பாக நிற்பார்கள் மற்றும் அவர்கள் "தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்பை" அடைவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 20:12).

ரோமர் 2:3ன் கேள்வியானது இன்றைக்கும் ஏற்புடையதாக உள்ளது: "நீ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளலாமென்று நினைக்கிறாயோ?" சிலவேளைகளில், குற்றம் செய்தவர் *மனிதருடைய* நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்கிறார். அவர்களின் குற்றங்கள் கண்டறியப்படாதிருக்கலாம் அல்லது அவர்கள் பிடிபடாதிருக்கலாம். பிடிபட்டால் அவர்கள் நுணுக்கமான வாதிடுதல் மூலம் விடுவிக்கப்படுவதற்கென்று தங்களுக்காக உயர்ந்த விலையுள்ள வழக்கறிஞர்களை அமர்த்த வசதியுள்ளவர்களாக இருக்கலாம். அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டாலும்கூட, அவர்கள் சிறையில் இருந்து தப்பிக்கொள்ளக்கூடலாம். இந்தச் சாத்தியக்கூறு எதுவும் *தெய்வீக* நியாயத்தீர்ப்புக்கு நடைமுறைப்படுவதில்லை. எந்த ஒரு பாவமும் கண்டறியப்படாமல் போகாது (எபிரெயர் 4:13), மற்றும் எந்தப் பாவியும் நியாயத்தீர்ப்புநாளில் இல்லாதுபோகமாட்டார் (வெளிப்படுத்தின விசேஷம் 20:12). தேவனுடைய வசனத்தில் "தப்பிச்செல்லும் இடைவெளி" என்று எதுவும் இல்லை (சங்கீதம் 18:30அ வைக் காணவும்) மற்றும் ஆக்கினை அடைபவர்களின் நித்திய சிறைவீடான நரகத்தில் இருந்து தப்பும் வழியெதுவும் இல்லை (மாற்கு 9:44; லூக்கா 16:26ஐக் காணவும்).

சிலவேளைகளில், வாழ்வில் பல நிச்சயமானவைகள் இல்லாதிருப்ப தாகக் காணப்படுகிறது, ஆனால் பின்வருவது நிச்சயமானதாகும்: நியாயத் தீர்ப்பின்நாள் *ஒன்றிருக்கும்,* வாழ்ந்திருந்த யாவரும் *அங்கிருப்பார்கள்.* நான் அங்கிருப்பேன், அதுபோல நீங்களும் அங்கிருப்பீர்கள். நியாயத்தீர்ப்பு என்பது தப்பிக்க இயலாததாக இருக்கிறது!

# *நியாயத்தீர்ப்பு வழக்கிட இயலாததாக இருக்கும்! (2:6-11)*

### *தேவன் நமது கிரியைகளுக்குத் தக்கவாறு நியாயந்தீர்ப்பார் (வசனங்கள் 6-8)*

அது நம்மை, நமது வசனப்பகுதியின் மிகவும் தர்க்கத்திற்குரிய பகுதிக்குக் கொண்டுவருகிறது: நம் கிரியைகளுக்குத் தக்கவாறு நியாயத்தீர்ப்பு இருக்கும் என்பது பவுலின் உறுதியான கூற்றாகும். அவர் பின்வருமாறு கூறினார்,

> தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்கு கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும் (வசனங்கள் 6-8).

*வசனப்பகுதி பரிசீலிக்கப்படுதல்.* முதல் பார்வையில், இவ்வசனப்பகுதி மிகவும் நேரானதாகக் காணப்படுகிறது. வேதாகமத்தின் வேறு இடங்களில் (எடுத்துக்காட்டாக, எரேமியா 32:19ஆ; ஓசியா 12:2இ), அல்லது பவுலினாலேயேகூட (2 கொரிந்தியர் 5:10ஐக் காணவும்) போதிக்கப்படாத எதுவும் இதில் போதிக்கப்படுவதில்லை. இவ்வசனப்பகுதியைச் சுற்றிநிற்கும் முரண்பாட்டைக்குறித்து எடுத்துரைப்பதற்குமுன்பு நாம் இவ்வசனப்பகுதியை முதலில் பரிசீலனை செய்வோம்.

பவுல், "தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பை" பற்றிப் பேசியதற்குப் பின்னர் (வசனம் 5ஆ), தேவன் "அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்" என்று கூறினார் (வசனம் 6). "கிரியைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *erga* என்ற வார்த்தை, "வேலை" என்பதற்கான பன்மை வடிவமாக உள்ளது, இது ஒரு நபர் செய்கிற எந்த ஒரு விஷயத்தையும் குறிப்பிடுகிற ஒரு பொதுச்சொற்றொடராக உள்ளது. பவுல் பழைய ஏற்பாட்டிலிருந்து அனேகமாக சங்கீதம் 62:12ல் இருந்து மேற்கோள் காண்பித்தார்.[11]

நமது கிரியைகளின்படி நாம் நியாயத்தீர்ப்டைவோம் என்பது இரு ஏற்பாடுகளிலும் ஊடோடுகிற ஆய்வுக்கருத்தாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் இயேசு, தாம் திரும்பவரும்போது, "அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனினளிப்ப[தாக]" கூறினார் (மத்தேயு 16:27). பவுல், "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 5:10). வெளிப்படுத்தின விசேஷம் 20ல் காணப்படும் நியாயத்தீர்ப்பின் காட்சியில், "அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள்

கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்" என்றுள்ளது (வசனம் 12). "கிரியைகள் விதைகளைப் போன்றுள்ளன: இப்போது நீங்கள் அவற்றை விதைக்கிறீர்கள், பிற்பாடு நீங்கள் அவற்றை அறுவடை செய்வீர்கள்" என்று யாரோ ஒருவர் கூறினார்.

வசனங்கள் 7, 8ல் பவுல் 2:6ன் அடிப்படைக் கொள்கையை விவரித்துரைத்தார். *அவர் நன்மை செய்தவர்களைத் தேவன் நியாயந்தீர்ப்பது பற்றிப் பேசினார்:* "சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளை செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு [தேவன்[12]] நித்திய ஜீவனை அளிப்பார்" (வசனம் 7). இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வகைப்படியான மக்கள் மூன்று விஷயங்களை நாடுகின்றனர்: "மகிமை [*doxa*] மற்றும் கனம் [*time*] மற்றும் அழியாமை [*aphtharsia*]" இப்படிப்பட்ட மக்களை, *சுயத்தை* நாடுபவர்களுடன் பவுல் நேர்மாறாக ஒப்பிட்டபடியால் (வசனம் 8), அவர் அநேகமாக, *சுயமகிமையையும்* கனத்தையும் நாடுபவர்களையல்ல, ஆனால் *தேவனுடனான* ஒரு விசேஷித்த உறவுமுறையை நாடுபவர்களையே இவ்விடத்தில் அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும்[13]. அவர்கள் தேவனுடைய சிறப்புயர்வை ("மகிமை"யை) காண ஏங்கினர்; அவர்கள் தேவனுடைய அங்கீகாரத்தை ("கனத்தை") விரும்பினர்; அவர்கள் தேவனுடைய பிரசன்னத்தை ("அழியாமையை"; யோவான் 17:3ஐக் காணவும்) பெரிதும் நாடினர். அவர்கள் உண்மையிலேயே முக்கியமானது எது என்பதுபற்றி உணர்வுகொண்டிருந்தனர்.

இப்படிப்பட்ட மக்கள் வெறுமனே நன்மையை மாத்திரம் *செய்பவர்களாக* இருப்பதில்லை; அவர்கள் நன்மை செய்வதில் *சோர்ந்துபோகாதிருக்கின்றனர்.* "சோர்ந்துபோகாமல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, "கீழே" என்பதற்கான (*hupo* என்ற) முன்னிடைச்சொல்லை "வாசம்பண்ணுதல்" என்பதற்கான (*meno* என்ற) வார்த்தையுடன் இணைத்துப்பெற்ற கூட்டுச்சொல்லாக (*hupomone*) உள்ளது.[14] இது அழுத்தத்தின்கீழ்கூட நிலைத்து நிற்கும் ("உறுதியாக நிற்கும்") திறனைக் குறிப்பிடுகிறது. இது, "கடினமான யுத்தத்தின் அடர்வில் ... தான் பெறும் அடிகளினால் திகைத்துப்போகாமல் முடிவுவரை போர்செய்யும் போர்ச்சேவகனுக்குப் பயன்படுத்தப்பட" முடிவதாயுள்ளது.[15]

*அடுத்ததாகப் பவுல், பொல்லாத கிரியைகள் உடையவர்களைப் பற்றிப் பேசினார்:* "சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ [தேவனிடத்திலிருந்து] உக்கிரகோபாக்கினை வரும்" (வசனம் 8). கலகக்காரர்களான இந்தத் தனிநபர்கள் முதலில் ''சண்டைக்காரர்கள்'' என்று விவரிக்கப்பட்டுள்ளனர் (வசனம் 8அ). இந்தச் சொற்றொடர், ''ஆதாயத்திற்காகத் தங்களை அற்பமாக்கிக்கொள்பவர்கள் ... 'அடிப்படையில் சுயத்தை நாடுபவர்கள்,' 'அடிப்படைத்தன்மை' என்பது உயர்வான விஷயங்களுக்குத் தனது கண்ணோக்கத்தை மாற்றக்கூடாதவர்களாக உள்ளவர்கள்'' என்று குறிப்பிட வந்த *eritheia* என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[16] அரிஸ்டாட்டில் என்பவர் இவ்வார்த்தையை, "பொது நன்மைக்கு மாறாக, தனிப்பட்ட ஆதாயத்திற்காக அதிகாரத்தை நாடுகிற அரசியல்வாதிகளை அவதூறாய் பேசுவதற்குப்

*பயன்படுத்தினார்."*[17]

*சுயத்தை நாடும் இவர்கள், "[தேவனுடைய வசனத்தில் கண்டுள்ள படியான] சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் அநியாயத்திற்குக் கீழ்ப்படி கின்றனர்'' (வசனம் 8ஆ). பிலிப்ஸ் என்பவர் தமது மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் இவர்களை, "ஜீவனுக்கான தேவனுடைய திட்டத்திற்கு எதிராகக் கலகம் செய்து அவரது சட்டங்களுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறவர்கள்" என்று விவரித்தார் - இவர்கள் "பொல்லாங்கினுடைய ஊழியக்காரர்களாக" இருக்கின்றனர்.*

*''உக்கிரகோபாக்கினை'' என்பதே அவர்களின் ''பலனாக'' இருக்கும் (வசனம் 8இ). "உக்கிர" (thumos) மற்றும் "கோபாக்கினை" (orge) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகள் இரண்டுமே "கோபம்'' என்பதற்கான கிரேக்க வார்த்தைகளாக உள்ளன. இவ்விரு வார்த்தைகளும் கோபத்தின் மாறுபட்ட வகைகளை விவரிக்கின்றன,*[18] *ஆனால் இங்கு இவைகள், மனம்வருந்தாதவர்கள்மீது கடைசிநாளில் "பற்றி எரியும்'' தேவனுடைய கோபத்தின் (NIrV) உக்கிரத்தைச் சித்தரிக்க ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.*[19] *"ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபிரெயர் 10:31)!*

*ரோமர் 2:7, 8ல் பவுல், மக்களில் இரு வகையினரை நேரெதிராக ஒப்பிட்டார். அவர்களின் இலக்குகள் மாறுபட்டுள்ளன: ஒருவர் தேவனை நாடுபவராக இருக்கையில் இன்னொருவர் சுயத்தை நாடுபவராக இருக் கிறார். அவர்களின் கிரியைகள் மாறுபட்டுள்ளன: ஒருவர் நன்மை செய் கையில், இன்னொருவர் தீமை செய்கிறார். ஆகையால், அவர்களின் முடிவுகள் மாறுபட்டிருக்கும்: ஒருவர் நித்திய ஜீவனைப் பெறுகையில் இன்னொருவர் தேவனுடைய "உக்கிரகோபாக்கினையை" பெறுவார். இரு சாத்தியக்கூறுகள் மாத்திரமே உள்ளன என்பதைக் கவனியுங்கள்; நடுவான தரையென்று எதுவும் இருப்பதில்லை. நீங்கள் ஒரு குழுவில் அல்லது இன்னொரு குழுவில் இருக்கிறீர்கள்.*

*பிரச்சனை வலியுறுத்தப்படுதல்.* 6 முதல் 8 வரையுள்ள வசனங்கள் அவற்றின் சொந்தக்கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும்போது, வேதாகமம் முழுவதிலும் இதேபோன்றுள்ள மற்ற வசனப்பகுதிகளில் போதிக்கப் பட்டுள்ளதைத் திரும்ப எடுத்துரைப்பதாக மட்டுமே காணப்படுகின்றன. இருந்தபோதிலும், இவ்விடத்தில் பவுலின் கூற்று நேர்மாறானதாக உள்ளது. இது, நாம் "விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிக்கப்படுகிறோம்'' மற்றும் நமது கிரியைகள் எதுவும் நமது இரட்சிப்பைப் பற்றி ஏதொன்றும் செய்ய இயலாது என்று போதிக்கிறவர்கள்மீது விசேஷித்த அக்கறையுடையதாக உள்ளது. அதைத்தவிர, இவ்வசனப்பகுதி விளக்கவுரையாளர்களைப் பொதுவாக மனம்கலங்கச்செய்வதாக உள்ளது, ஏனென்றால் அவர்கள், நமது கிரியைகளினாலே (*erga*) அல்ல ஆனால் - விசுவாசத்தின் அடிப்படையில் - கிருபையினாலே நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்று பவுல் வலியுறுத்தினார் என்று தெளிவாக அறிந்துள்ளனர் (வேதனைமிக்க வகையிலும்கூட அறிந்துள்ளனர்) (எடுத்துக்காட்டாக, 4:1-8; 11:6 ஆகியவற்றைக் காணவும்).

வேதாகமத்தைப் பற்றிப் பிரசங்கிக்கும், போதிக்கும் மற்றும் எழுதும் நம்மில் பெரும்பான்மையானவர்கள், சீர்பொருத்தமற்றதாகத் தோன்றும் எதையும் மற்றும் எல்லாவற்றையும் இணக்கமாக்கக் கட்டாயப்படுத்தப்படுதலை உணருகிறோம். இப்படிப்பட்ட விஷயங்கள், ஏவுதல் பெற்ற எழுத்தாளர் களுக்கு குறைவான அக்கறையுள்ளவைகளாயிருந்தன என்பது தெளிவு. எடுத்துக்காட்டாக, 8 முதல் 11வரையுள்ள அதிகாரங்களில் பவுல், தேவனுடைய ராஜரீக சித்தத்தின்படியான முன்குறித்தல் மற்றும் பிற விளக்கங்களைப் பற்றி எழுதினார். அதே வேளையில், இந்த அப்போஸ்தலர், மனிதகுலத்தின் சுயாதீன சித்தத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதை ரோமருக்கு எழுதிய இந்நிருபம் தெளிவாகச் சுட்டிக்காண்பிக்கிறது. நீங்களும் நானும் 8ம் அதிகாரத்தை அடையும்போது, தேவன் நமது சுயாதீன சித்தத்தில் இடையூறு ஏற்படுத்தாமல் எவ்வாறு முன்குறிக்கவும் எதிர்காலத்தை முன்னதாகவே அறியவும் முடியும் என்பது பற்றி நாம் போராடுவோம். இவ்விரு கருத்துக்களையும் ஒன்றிணைக்கப் பவுல் தேவையெதையும் காணவில்லை என்பது உறுதி. அவர் தேவனுடைய ராஜரீகத்தின்மீதான சத்தியத்தையும் மனிதகுலத்தின் சுயாதீனமான சித்தத்தின்மீதான சத்தியத்தையும் முன்வைத்தார் - அதைப்பற்றி அவர் அதிகமாக எதுவும் கூறவில்லை.

வேதவசனங்களில் "ஒவ்வொன்றையும் பொருந்தச் செய்வதற்கான" நமது முயற்சிகள் சிலவேளைகளில் எனக்கு, ஒரு கடினமான புதிரைத் தீர்க்க முயற்சிசெய்யும் ஒரு குழந்தையை நினைவூட்டுகிறது. அவனால் எல்லாத் துண்டுகளையும் ஒன்றாகப்பொருத்த இயலவில்லையென்றால், அவன் சலிப்பு அடைகிறான். அவன், ஒரு துண்டானது சுலபமாகத் தன்னிடத்திற்கு சேரவில்லையென்றால், "அதை பொருந்தச் செய்வதற்கு" அவன் அந்தத்துண்டை அடித்து அழுத்தவும் முயற்சி செய்யக்கூடும்.

உருவகநடையில் பேசுவதென்றால், இதேவிஷயம் 2:6-8ல் நியாயத் தீர்ப்புப் பற்றிய பவுலின் போதனை குறித்தும்கூட சிலவேளைகளில் உண்மை யாக உள்ளது: பல எழுத்தாளர்கள், இவ்வசனங்களை, ரோமருக்கு எழுதிய நிருபத்தின் பிந்திய போதனைகளை உறுதிப்படுத்துவதாக அமைப்பதற்கு பெருவிருப்பம்கொண்டு, இந்த வலிவார்ந்த வசனப்பகுதியைக் கவனமற்ற வகையில் அகற்றுகின்றனர். சிலர், இவ்வசனப்பகுதி ஆக்கினைத்தீர்ப்பை மாத்திரம் குறிக்கிறது என்று கூறுகின்றனர் - ஆனால் 7 மற்றும் 10ம் வசனங்கள் இரட்சிப்பைப் பற்றிப் பேசுவதாகவே நிச்சயமாய்த் தோன்றுகின்றன. மற்றவர்கள், "கிரியைகள்" என்பவை விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களால் செய்யப்படுபவையாக உள்ளன என்று வலியுறுத்தி அதை அப்படியே விட்டுவிடுகின்றனர் - ஆனால் முடிவுவரை, நாம் எவ்வாறு (எந்த அடிப்படையில்) "நமது கிரியைகளினால் இரட்சிக்கப்படுகிறோம்" என்ற கேள்விக்குப் பதில் அளிக்காமலேயே விட்டுவிடுகிறது. இன்னும் மற்றவர்கள், எவரொருவரின் கிரியைகளும் பூரணப்பட்டவைகளாக இராதபடியால், இரட்சிப்புக்குத் தொடர்புடைய கிரியைகள் என்பது கருதுகோளாக மாத்திரமே உள்ளது என்று உறுதிப்படுத்துகின்றனர். இதே வரிசைகளில் சிலர், எவரொருவரும் தேவனுடைய பிரமாணத்தைப்

பூரணமாகக் கைக்கொள்ள இயலாது என்பதால், நீதிமானாக்குதல் என்பதன் முறைமையானது சாத்தியமற்றது என்று சித்தரித்தலே இவ்விடத்தில் பவுலின் நோக்கமாக இருந்தது என்று கூறுகின்றனர்.

இவர்களில் பெரும்பான்மையானவர்கள் கூறுவது என்ன என்று நான் புரிந்துகொள்கிறேன், மற்றும் நம்மில் எவரொருவரும் நமது இரட்சிப்புக்குத் தகுதிவாய்ந்த நற்கிரியைகளைப் போதுமான அளவு செய்ய இயலாது என்பதையும் நான் உணர்ந்தறிகிறேன். இருப்பினும், பவுல் நியாயத்தீர்ப்பின் நாளை அதன் பலன்கள் மற்றும் தண்டனைகளுடன் விரிவான சித்தரிப்பாக வரைந்தபோது இந்த நோக்கங்களைத் தமது சிந்தையில் கொண்டிருந்தாரா என்று நான் வியப்படைகிறேன்.

கொரிந்தியருக்குப் பவுல், "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" என்று கூறியபோது (2 கொரிந்தியர் 5:10), மீட்புக்குச் சாத்தியமற்ற முறைமையொன்றைச் சித்தரிப்பது அவருடைய நோக்கமாக இருந்ததா? கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில், தாம் "அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளி[க்கப்போவதாக]" கூறியபோது (மத்தேயு 16:27), அவர் ஆக்கினைத்தீர்ப்பை மாத்திரம் குறிப்பிட்டாரா? 2:6ல் மேற்கோள் காண்பிக்கப்பட்ட வசனப்பகுதியில் தாவீது, தேவனுடைய "அன்பான இரக்கத்தை" குறிப்பிட்டு, கர்த்தர் ஒரு மனிதனுக்கு "அவனது கிரியைக்கு" தக்கதாகப் பலனளிக்கும்போது *நல்ல* விஷயங்கள் நடப்பதற்குச் சாத்தியக்கூறு உள்ளது என்று மறைமுகமாகக் குறிப்பிட்டார் (சங்கீதம் 62:12).

4 முதல் 10 வரையுள்ள வசனங்கள் வேதாகமத்தில் வேறு எங்காவது காணப்பட்டால், அவ்வசனப்பகுதி தீமையை அல்ல ஆனால் நன்மையைச் செய்ய வற்புறுத்தும் ஊக்குவிப்பு என்று நாம் எடுத்துக்கொள்வோம். ரோமர் 2ல் இதுவே பவுலின் விருப்பார்ந்த நோக்கமாக இருக்கச் சாத்தியமுண்டா? அவர் அப்போதுதான் யூதர்கள் புறஜாதியாரைக் கண்டனம்பண்ணியிருந்த அதே பாவங்களினால் குற்றப்பட்டிருந்தனர் என்று குற்றம்சாட்டியிருந்தார். அவர்கள் குற்றப்பட்டிருந்தபோதிலும் மனம் வருந்தாமல் இருந்தனர். அவர் சற்று நிறுத்தி, "நீங்கள் மனந்திரும்பி சரியாக வாழாவிட்டால், நீங்கள் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பை எதிர்கொள்வீர்கள்! நீங்கள் உங்கள் இருதயங்களையும் வாழ்வையும் மாற்றிக்கொண்டால், நன்மைகள் உங்களை எதிர்நோக்கி வருகின்றன - ஆனால் நீங்கள் தொடர்ந்து கர்த்தருக்கும் அவரது சித்தத்திற்கும் எதிராகக் கலகம் செய்தால், பயங்கரமானவைகள் உங்களுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளன" என்று கூறுவது நியாயமற்றதாக இருக்குமா?

*சாத்தியக்கூறுகள் ஆராயப்படுதல்.* நம்மில் பலர் இன்னமும், இரு கருத்து நோக்குகளுக்கிடையில் இறுக்கம் உள்ளதென்று நாம் நினைக்கும் விஷயத்தின்மீது அமைதியற்ற தன்மையை அனுபவிக்கின்றோம். விஷயம் அதுவாக இருந்தால், பின்வரும் விளக்கங்கள் முறையானவையாக உள்ளன:

(1) "நன்மை செய்தல்" என்ற விஷயம்குறித்தும்கூட, "கிரியைகளின்" வேறுபட்ட வகைகள் உள்ளன என்பது நான் கூறக்கூடிய மிகமுக்கியமான

விஷயமாக இருக்கலாம். ஒருபுறம் சுயநீதியின் கிரியைகளும் (லூக்கா 18:9ஐக் காணவும்) உள்ளான மோசமான தன்மையை மறைக்கிற புறம்பான கிரியைகளும் (மத்தேயு 23:28ஐக் காணவும்) உள்ளன. இப்படிப்பட்ட கிரியைகளைத் தேவன் தயவுடன் நோக்குவதில்லை என்பது தெளிவு. இன்னொருபுறம், "கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தினால்" விளையும் கிரியைகள் உள்ளன (ரோமர் 1:5; 16:26). இவைகள் இயேசுவின்மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் வெளிப்பாடுகளாக உள்ளன. நன்மை செய்கிறவர்கள் நித்திய ஜீவனை அடைவார்கள் (2:7) என்று பவுல் கூறியதை அவர் அர்த்தப்படுத்துவார் என்றால், அவர் விசுவாசத்தின் கிரியைகளைத் தமது சிந்தையில் கொண்டுள்ளார் என்றாகிறது. லியோன் மோரிஸ் என்பவர், செயல்கள் (கிரியைகள்) என்பவை, "ஒரு நபரின் உள்ளான ஆழத்தில் உள்ளவற்றின் புறம்பான வெளிப்பாடுகளே ஆகும். விசுவாசிகளுக்குள் இவை விசுவாசத்தின் வெளிப்பாடுகளாக உள்ளன ..." என்று எழுதினார்.[20]

(2) பவுல், நன்மையை நாடுபவர்களை சுயத்தை நாடுபவர்களுடன் வேறுபடுத்தி ஒப்பிட்டார் (வசனம் 8). அவர், *தேவனை* நாடுபவர்களின் நன்மையான கிரியைகளுக்குப் பலனளிக்கப்படும் என்று கூறினார் (வசனம் 7). இப்படிப்பட்ட மக்கள் சுயத்தில் அல்ல, கர்த்தரில் நம்பிக்கை வைக்கின்றனர்.

(3) மேலும், பவுல் சத்தியத்திற்குக் *கீழ்ப்படிதலை* அநீதிக்குக் *கீழ்ப்படிதலுடன்* வேறுபடுத்தி ஒப்பிட்டார் (வசனம் 8). நாம் வலியுறுத்தியுள்ளபடி, ரோமருக்கு எழுதிய நிருபத்தில், *விசுவாசத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும்* இடையில் பலத்த உறவுள்ளது. J. D. தாமஸ் என்பவர் பின்வருமாறு எழுதினார்.

> வசனம் 8ல் உள்ளபடி "கீழ்ப்படிதல்" என்ற சொற்றொடர் ... தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்குக் கீழ்ப்படிதலின்றி இரட்சிப்பு இருக்க முடியாது என்று வலியுறுத்துகிறது. இருப்பினும், இது, ஒருசில கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது. இது முழுமையான ஒப்புக்கொடுத்தலை உள்ளடக்குகிற "கவனித்துக்கேட்டு பணிவுடன் கீழ்ப்படிதலை" அர்த்தப்படுத்துகிறது.[21]

விசுவாசமே "முழுமையான கீழ்ப்படிதலை" உண்டாக்குகிறது.

(4) 1 முதல் 16 வரையுள்ள வசனங்களை கவனமாக வாசியுங்கள், அதில் நீங்கள், பவுல் "நன்மை செய்தல்" என்பது பற்றி மாத்திரம் அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதைக் காண்பீர்கள்; அவர் அந்தக் கிரியைகளுக்குப் பின்னால் உள்ள *தூண்டுதல்* பற்றியும் சம அளவுக்கு அக்கறை கொண்டிருந்தார். 5ம் வசனத்தில் அவர் இருதயத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். 16ம் வசனத்தில் அவர் மனிதர்களின் "அந்தரங்கங்கள்" பற்றி - அவர்களின் சிந்தனைகள் மற்றும் நோக்கங்கள் உள்படப் பேசினார். ஜான் மெக்கார்தர் என்பவர், "ஒரு நபரின் செயல்கள், அவரது பண்பு

பற்றிய தவறற்ற பொருளடக்கத்தை வடிவமைக்கின்றன" என்று கூறினார்[22] (மத்தேயு 7:16, 20ஐக் காணவும்).

(5) கடைசியாக, வேதவசனங்களில் எந்த வசனப்பகுதியும் ஒருக்காலும் தனிப்படுத்தப்படக்கூடாது என்று நமக்கு நாமே நினைவூட்டிக்கொள்ளுதல் எப்போதும் ஏற்புடையதாக உள்ளது. ரோமருக்கு எழுதிய நிருபத்தில் மற்ற வசனப்பகுதிகள் மற்றும் வேறிடங்களில் உள்ள வசனப்பகுதிகள் ஆகியவற்றின் வெளிச்சத்தில், 8 மற்றும் 9ம் வசனத்தில் கூறப்படும் தீமை செய்கிறவர்கள் என்பவர்கள், கர்த்தர்மீது நம்பிக்கை வைக்காதவர்கள் அல்லது அவருக்குத் தங்களை ஒப்புக்கொடுக்காதவர்களாக உள்ளனர் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். நியாயத்தீர்ப்பில் அவர்கள் தங்களின் பாவங்கள் பற்றியப் பதிவேடுகளுடன் தேவனை எதிர்கொள்வார்கள். மேலும் நாம், 7 மற்றும் 9ம் வசனங்களில் உள்ள, நன்மை செய்கிறவர்கள் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் *கீழ்ப்படிந்து* அவரது கிருபையை ஏற்றுக்கொண்டவர்கள் என்றும் யூகிக்க முடியும். பழைய ஏற்பாட்டின்கீழோ அல்லது புதிய ஏற்பாட்டின்கீழோ, அவர்களின் பாவங்கள் இயேசுவின் இரத்தத்தைக் கொண்டு கழுவப்பட்டன (எபிரெயர் 9:15ஐக் காணவும்). இவ்விதமாக அவர்கள் நியாயத்தீர்ப்பைப் பயமின்றி எதிர்கொள்வார்கள்.

J. D. தாமஸ் என்பவர் ரோமர் 2:6ஐ ஆழ்ந்து சிந்திக்கையில், "கிறிஸ்தவரின் நிறைவான பலன் என்பது அவரது கிரியைகளின்மீது *சில வழிகளில்* மற்றும் *சில அளவுக்குச்* சார்ந்திருக்கும் என்பதை ... கவனித்தல் போதுமானதாகும்" என்று எளிமையாகக் கூறினார்.[23] இன்னொருவர், "நாம் நமது கிரியைக*ளினால்* இரட்சிக்கப்படுவதில்லை, ஆனால் நாம் *அவையில்லாமலும்* இரட்சிக்கப்பட முடியாது - ஏனெனில் நமது கிரியைகள் நமது விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றன [யாக்கோபு 2:18, 20ஐக் காணவும்]" என்று கூறியுள்ளார். இப்போதைக்கு நாம் இந்தக் குறிப்புகளுடன், "நமது கிரியைகளின்படி நியாயந்தீர்க்கப்படுதல்" என்ற விஷயத்தை விட்டுவைப்போம்.

### விதிவிலக்குகள் எதுவும் இராது (வசனங்கள் 9-11)

9 மற்றும் 10ம் வசனங்களில் பவுல், 7 மற்றும் 8ம் வசனங்களின் சிந்தனையை (தலைகீழான வரிசையில்) - ஒரு முக்கியமான கூடுதல் விவரத்துடன் திரும்பக்கூறினார். 9ம் வசனத்தில் அவர் தீமை செய்பவர்களின் முடிவு பற்றிப் பேசினார்: "... பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும்" (வசனம் 9ஆ). 8ம் வசனம், தீமை செய்கிறவர்களுக்குத் தேவனுடைய உக்கிரகோபாக்கினை ("கோபமும்" மற்றும் "உக்கிரமும்") காத்துள்ளது என்று உரைக்கிறது. இப்போது, 9ம் வசனம், அவர் "உபத்திரவத்தையும் வியாகுலத்தையும்" பெறுவார் என்று கூறுகிறது.

"உபத்திரவம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை (*thlipsis*) அடிப்படையில், "ஆவியைத் துன்புறுத்துகிற" ஒரு "அழுத்தம்" என்று அர்த்தப்படுகிறது.[24] "வியாகுலம்" என்பது "ஒரு குறுகலான இடம்" என்று அர்த்தப்படுகிற (*stenos* ["குறுகலான"] என்பதுடன் *chora* ["ஒரு இடம்"]) என்ற

*வார்த்தையை இணைத்துப் பெற்ற (stenochoria என்ற) கூட்டுச்சொல்லில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; இது இப்படிப்பட்ட வகையில் அடைக்கப்பட்டிருப்பதால் உண்டாகிற உபத்திரவத்தைப் பற்றியதாக உள்ளது.[2] நரகத்தில் துன்மார்க்கர், பழமொழிவழக்கின்படியான பாறை மற்றும் கடினமான இடம் ஆகியவற்றிற்கு இடையில் இருப்பார்கள்.*

*விதிவிலக்குகள் எதுவும் இருக்குமா? இல்லை. "பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும்" இந்தத் தண்டனை இருக்கும் என்று பவுல் கூறினார். இதற்கு நிரூபணமாகப் பவுல், எந்த யூதரும் எதிர்பார்த்திராத திசையில் தமது போதனையை விரிவாக்கினார். "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்" (வசனம் 9அ). யூதர்களுக்குச் சிறப்பான சிலாக்கியங்கள் அருளப்பட்டிருந்தன (வசனங்கள் 17-20), ஆனால் சிறப்பான சிலாக்கியங் களுடன் சிறப்பான பொறுப்புகளும் இருந்தன. யூதர்கள் "தேவனுடைய நியாயத்தீர்ப்பில் இருந்து தப்ப" மாட்டார்கள் என்பதோடு (வசனம் 3) நிற்பதில்லை; அவர்கள் நியாயத்தீர்ப்பின் நாளில் தேவனுடைய அரியாசனத்தின்முன்பாக "முதல் வரிசையில்" இருப்பார்கள்!*

*அடுத்ததாகப் பவுல், நன்மை செய்கிறவர்களிடம் திரும்பினார்: "எவன் நன்மைசெய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும்" (வசனம் 10ஆ). இவ்வசனத்தில், "சமாதானம்" (eirene) என்பது தேவனுடனும் மனிதருடனுமான சமாதானத்தை - பரலோகத்தில் மாத்திரமே உணர்ந்தறியப்படுவதாக இருக்கும் நிறைவான மற்றும் முழுமை யான சமாதானத்தை - குறிக்கிறது. அப்போஸ்தலர், "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்" என்பதையும் கூடுதலாகக் கூறினார் (வசனம் 10அ). "ஏனெனில்," "தேவனிடத்தில் பட்சபாதமில்லை" என்று அவர் கூறினார் (வசனம் 11).*

*ஜான் R. W. ஸ்டாட் என்பவர், நாம் நமது கிரியைகளின்படி நியாயந்தீர்க்கப்படுவோம் என்று வேதவசனங்கள் கூறுவது ஏன் என்பதற்கு ஆர்வமுள்ள கோட்பாடு ஒன்றைக் கொண்டிருந்தார்:*

> *... நியாயத்தீர்ப்பின் நாள் என்பது ஒரு பொதுவான நிகழ்வாக இருக்கும்.*
>
> *... பொதுவான தீர்ப்பு தரப்படும் மற்றும் பொதுவான தண்டனை தரப்படும். இப்படிப்பட்ட பொதுவான நிகழ்வானது, அவற்றை ஆதரிப்பதற்குப் பொதுவான மற்றும் நிதானித்தறியக்கூடிய சாட்சியம் தேவைப்படுவதாக இருக்கும். நாம் செய்துள்ள மற்றும் செய்பவையாகக் காணப்படுகிற நமது கிரியைகளே கிடைக்கக்கூடிய ஒரே பொதுவான ஆதாரமாயிருக்கும்.[26]*

*ஸ்டாட் என்பவரின் காட்சியை நாம் ஒப்புக்கொண்டாலும் இல்லா விட்டாலும், நமது கிரியைகளைக் கொண்டு நியாயந்தீர்க்கப்படுதல் என்பதைக் காட்டிலும் நியாயத்தீர்ப்புக்கு அதிகம் நியாயமான அடிப்படை வேறெதுவும் இருக்க இயலாது என்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியும். நான் உங்களது கிரியைகளின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்பட மாட்டேன்; நீங்கள் எனது கிரியைகளின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்பட*

*மாட்டார்கள்; ஒவ்வொருவரும் அவனோ அல்லது அவளோ செய்த கிரியைகளின் அடிப்படையிலேயே நியாயந்தீர்க்கப்படுவோம். ஆதாரமானது வழக்காட இயலாததாக இருக்கும்; தீர்ப்பு நியாயமானதாக இருக்கும்.*

## *நியாயத்தீர்ப்பு பட்சபாதமற்றதாக இருக்கும்! (2:12-15)*

*முந்திய பகுதியானது 11ம் வசனத்துடன் முடிவடைந்தது: "தேவனிடத்தில் பட்சபாதமில்லை." "பட்சபாதம்" என்பது, "முகம்" என்பதற்கான (prosopon என்ற) சொல்லுடன் "பெறுதல்" என்பதற்கான (lambano என்ற) சொல்லை இணைத்துப் பெற்ற (prosopolempsia என்ற) கூட்டுச்சொல்லில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "ஒருவரின் முகத்தைப் பெறுதல்" - அதாவது, புறம்பான தோற்றத்தின் அடிப்படையில் இன்னொருவரை நடத்துதல் - என்பதே கருத்தாக உள்ளது. மனிதர்கள் என்ற வகையில் நாம், "புறம்பான தோற்றத்தின் அடிப்படையில்" ஒருவரை ஏற்றுக்கொள்ளவோ அல்லது புறக்கணிக்கவோ சாய்கிறோம். மற்றும் நாம், நமது தீர்ப்பில் அடிக்கடி பட்சபாதமாக இருக்கிறோம், சிலரிடம் கடுமையாக நடந்துகொண்டு சிலரிடத்தில் கனிவாக நடந்துகொள்கிறோம். இருப்பினும், தேவன் பட்சபாதமற்றவராக இருக்கிறார் (உபாகமம் 10:17; 2 நாளாகமம் 19:7; நடபடிகள் 10:34, 35 ஆகியவற்றைக் காணவும்). (அந்தச் சிந்தனையை ரோமர் 11 பற்றிய நமது பிந்திய படிப்புக்காகப் பொதிந்து புறம்பே வைத்துவிடுங்கள். 11:26ம் வசனமானது, ஒரு நாளில் தேவன் எல்லா யூதர்களையும் இரட்சிப்பார் என்று போதிப்பதாகச் சிலர் நம்புகின்றனர். விஷயம் அதுவாக இருந்தால், தேவன் புறஜாதியார் அனைவரையும்கூட இரட்சிக்க வேண்டியதிருக்கும், - ஏனெனில் அவர் எல்லாரையும் ஒன்றுபோலத்தானே நடத்துகிறார்![27])*

*தொடரும் வசனங்களில் பவுல், யூதர்களையும் புறஜாதியார்களையும் தேவன் எவ்வாறு நடத்தினார் என்பதைப் பற்றிப் பேசுவதன்மூலம், தேவனுடைய பட்சபாதமின்மையை விவரித்தார். இந்த அப்போஸ்தலர், இயேசுவின் வருகைக்கு முன்னர் யூதர்களுடனும் புறஜாதியார்களுடனும் தேவனுடைய செயல்களைத் தமது சிந்தையில் விசேஷமாய்க் கொண்டிருந்தார்.*

### *புறஜாதியாரும் யூதர்களும் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (வசனங்கள் 12, 13)*

*12ம் வசனம், "எவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் பாவஞ் செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் கெட்டுப் போவார்கள்" என்று தொடங்குகிறது (வசனங்கள் 12அ, ஆ). இங்குதான் பவுல், "நியாயப்பிரமாணம்" (nomos) என்ற வார்த்தையை முதன்முதலாகப் பயன்படுத்துகிறார், இது இந்த நிருபத்தில் மிகமுக்கியத்துவம் வாய்ந்த இடத்தைக் கொண்டுள்ளது. Nomos என்பது பல வகையான அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும்,[28]*

ஆனால் இங்கு அது மோசேயின் நியாயப்பிரமாணத்தையே குறிக்கிறது. ‘‘எவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் பாவஞ்செய்கிறார்களோ’’ என்ற சொற்றொடரானது (வசனம் 12அ) “தேவனுடைய எழுதப்பட்ட பிரமாணம்’’ இல்லாத புறஜாதியார்களைக் குறிப்பிடுகிறது. அவர்கள் ‘‘நியாயப்பிரமாணமில்லாமல் கெட்டுப்போவார்கள்’’ என்று பவுல் கூறினார் (வசனம் 12ஆ).

மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்த யூதர்களைப் பொறுத்தமட்டில் பவுல், “எவர்கள் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்களாய்ப் பாவஞ்செய்கிறார்களோ, [அதாவது, யூதர்கள்] அவர்கள் நியாயப்பிரமாணத்தினாலே ஆக்கினைத்தீர்ப்படைவார்கள்’’ என்று கூறினார் (வசனம் 12இ). தொடர்ந்து அவர், “நியாயப்பிரமாணத்தைக் *கேட்கிறவர்கள்* தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி *செய்கிறவர்களே* நீதிமான்களாக்கப்படுவார்கள்’’ என்றும் கூறினார் (வசனம் 13). பெரும்பான்மையானவர்கள், ஒவ்வொரு ஓய்வுநாள்தோறும் ஜெப ஆலயத்தில் நியாயப்பிரமாணம் வாசிக்கப்படுதலைக் கேட்டே அதைக் கற்றறிந்தனர் (நடபடிகள் 13:15ஐக் காணவும்). இருப்பினும், பவுல் நியாயப்பிரமாணத்தைக் *கேட்டால்* மாத்திரம் போதுமானதல்ல; ஒருவர் அதன்படி *செய்யவும்* வேண்டும் என்று வலியுறுத்தினார் (யாக்கோபு 1:22-25உடன் ஒப்பிடவும்).

**எல்லாரும் நியாயமாய் நியாயந்தீர்க்கப்படுவோம் (வசனங்கள் 14, 15)**

சிலர், “எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்த யூதர்களை நியாயந்தீர்த்தல் தேவனுக்கு நியாயமானதாக உள்ளது; ஆனால் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதியாரை நியாயந்தீர்த்தல் என்பது நியாயமானதல்ல’’ என்று மறுப்புத் தெரிவிக்கலாம். “புறஜாதியார், மனச்சாட்சி மற்றும் ஊழியப்பணி’’ என்ற பாடத்தில் குறிப்பிட்டபடி, புறஜாதியார் ஒரு பிரமாணத்தைக் கொண்டிருந்தனர் என்பதே பவுலின் பதிலாக இருந்தது. அவர்கள் கற்பலகைகளில் எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருக்கவில்லை, ஆனால் அவர்கள் தங்களின் இருதயங்களில் எழுதப்பட்ட பிரமாணம் ஒன்றைக் கொண்டிருந்தனர் (வசனங்கள் 14, 15[29]).

எவரொருவரும் - அவர் யூதராயிருந்தாலும் அல்லது புறஜாதியாராயிருந்தாலும் - தாம் கொண்டிருந்த தர அளவையின்படி வாழவில்லை என்று காண்பித்தலே பவுலின் நோக்கமாக இருந்தது. ஆகையால், எல்லாருக்குமே தேவனுடைய நீதி அவசியமாயிருந்தது. இருப்பினும், இப்போதைக்கு நான், தேவன் அந்தக்கணத்தில் நியாயமானவராக இருந்தார் (மற்றும் இருக்கிறார்) என்ற உண்மையை அடிக்கோடிட்டுக் காண்பிக்க விரும்புகிறேன். “தேவன் எல்லாரையும் சமானமாகவே நடத்துகிறார்’’ (2:11; NIrV).

# *நியாயத்தீர்ப்பு தவிர்க்க இயலாததாக இருக்கும் (2:16)*

*நியாயத்தீர்ப்பு பற்றிய பவுலின் சிந்தனையை 16ம் வசனம் முடித்து வைக்கிறது. இவ்வசனமானது 12ம் வசனத்துடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டும் என்று சிலர் நினைக்கையில், இது இயல்பாகவே 13ம் வசனத்தைத் தொடருகிறது என்று மற்றவர்கள் நம்புகின்றனர்.*[30] NASB *வேதாகமத்தில், 16ம் வசனமானது 14ம் வசனத்தில் தொடங்கிய வாக்கியத்தை நிறைவுசெய்கிறது. எவ்வகையில் இதை நாம் கண்ணோக்கி னாலும், இவ்வசனம் கலந்துரையாடலுக்குப் பொருத்தமான முடிவாக உள்ளது. பவுல், "என் சுவிசேஷத்தின்படியே,*[31] *தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக்குறித்து நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் நாளைப் பற்றிப் பேசினார் (வசனம் 16).*

### *பிழையற்ற மதிப்பீட்டாளர்*

*16ம் வசனம் குறுகியதாக உள்ளது, ஆனால் அது பலருக்குத் திகைப்பு களைக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, யார் நியாயந்தீர்ப்பார் என்பது பற்றிச் சிலர் திகைப்படைகின்றனர்: "தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு ... நியாயத்தீர்ப்புக்கொடு[ப்பார்]."*

*இயேசு தமது சொந்த ஊழியத்தின் நாட்கள் முழுவதிலும், தேவன் நியாயத்தீர்ப்பு யாவற்றையும் தம்மிடத்தில் ஒப்புவித்திருந்ததாக அறிவித்தார் (யோவான் 5:22; மத்தேயு 7:21-23; 25:31-33ஐக் காணவும்). கொர்நேலியுவினிடத்தில் பேதுரு, இயேசுவே "உயிரோடிருக்கிறவர் களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி" என்று கூறினார் (நடபடிகள் 10:42). பவுல், மார்ஸ்மேடையின்மீது தாம் செய்த பிரசங்கத்தில், தேவன் "ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" என்று கூறினார் (நடபடிகள் 17:31).*

*பலர், இயேசுவைப்பற்றி நினைக்கும்போது, அவர் ஒரு அற்புதமான மனிதர், வல்லமைநிறைந்த பிரசங்கியார் மற்றும் நமது இரட்சகர் என்று நினைக்கின்றனர் - ஆனால் அவர் நமது நியாயாதிபதி என்று நினைப்பதில்லை. "இயேசு பூமியின் நியாயாதிபதியாக இருக்கிறார் என்ற கருத்தை உள்ளடக்காமல் அவரைப்பற்றிய சித்தரிப்பு ஒன்றைக் கொண்டுள்ள எவரும், இரட்சகரின் உண்மையான அடையாளத்தைப் பற்றிய தீவிரமான தவறான புரிந்துகொள்ளுதலின்கீழாகவே உழைத்துக்கொண்டிருக்கிறார்."*[32]

### *குற்றம்கூறும் சாட்சியம்*

*அந்த நாளில் எது வெளிப்படுத்தப்படும் என்பது பற்றியும் சிலர் திகைப்படைவார்கள்: "தேவன் மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயந்தீர்ப்பார்." "அந்தரங்கங்கள்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள (kruptos என்பதன் பன்மைப்பதமான krup-*

*ta*) என்பது ''ரகசியமான'' (அல்லது மறைவான) விஷயங்கள் என்று அர்த்தப்படுகிறது.[33] இது மற்றவர்களுக்குத் தெரியாத எந்த விஷயத்தையும் குறிக்கிறது: நமது சிந்தனைகள் (NCV; NIrV) மற்றும் நோக்கங்கள் (LB), கேட்கப்படாத வார்த்தைகள் மற்றும் ரகசியமாகச் செய்யப்படும் செயல்கள் (NLT; Phillips). இயேசு, "வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை, அறியப்படாத ரகசியமுமில்லை" என்று கூறினார் (லூக்கா 12:2; பிரசங்கி 12:14ஐக் காணவும்).

ஒவ்வொருவரும் தமது வாழ்வில் மற்றவர்கள் அறியாதுள்ளதாக நினைக்கும் விஷயங்களைக் கொண்டுள்ளோம். உதாரணாக, ஒரு மனிதர், வேக எல்லையை மீறுகிறார் அல்லது சிகப்பு விளக்கு எரிகையில் சாலையைக் கடந்து செல்லுகிறார். அவர் இங்கும் அங்கும் விரைவாகப் பார்க்கிறார், ஆனால் காவலர் யாரும் பார்வையில் இருப்பதில்லை. அவர் நிம்மதிப்பெருமூச்சு ஒன்றைவிட்டு, "எவரொருவரும் என்னைப் பார்க்கவில்லை!" என்று நினைத்துக்கொள்கிறார். திருத்தம்: எந்த *மனிதரும்* அவரைப் பார்க்கவில்லை, ஆனால் *தேவன்* அவரைப் பார்த்தார். கர்த்தர் ஒவ்வொரு விஷயத்தையும் அறிகிறார் மற்றும் ஒவ்வொரு விஷயத்தையும் அவர் பார்க்கிறார் (1 சாமுவேல் 16:7; சங்கீதம் 139:1-4; எரேமியா 17:10; லூக்கா 16:15; யோவான் 2:25; எபிரெயர் 4:12, 13 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்) - மற்றும் கடைசிநாளில் சகலமும் வெளியாக்கப்படும்! அது உங்கள் அயலார்களுக்கும், உங்கள் நண்பர்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் வெளியாக்கப்படும். இயேசுவின் இரத்தத்தினால் மூடப்படாத ஒவ்வொரு பாவமும் (மத்தேயு 26:28; 1 யோவான் 1:7) வெளியாக்கப்படும்! எவ்வளவு சங்கடம்! எவ்வளவு பேரழிவு!

**தவிர்க்க இயலாத நிகழ்ச்சி**

ரோமர் 2:16, நியாயத்தீர்ப்பின் வரலாறு என்பது சுவிசேஷத்தின் ஒருங்கிணைந்த பாகமாக உள்ளது என்ற உண்மை போன்ற பிற திகைப்புக்களைக் கொண்டுள்ளது: "*என் சுவிசேஷத்தின்படியே,*[34] தேவன் ... மனுஷ[ரை] ... நியாயந்தீர்ப்[பார்]." "நற்செய்தியின்" மகிமையை முற்றிலுமாக உணர்ந்து அறிந்து மதிப்பதற்கு, அதை நாம் நியாயத்தீர்ப்பின் இருளான பின்னணிக்கு எதிராகக் காண்பது அவசியமாக உள்ளது.

இருப்பினும், நியாயத்தீர்ப்பின் நாள் ஒன்று இருக்கும் என்பதே பலருக்கு மாபெரும் திகைப்புக்குரிய விஷயமாயிருக்கும்: "தேவன் மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயந்*தீர்ப்பார்.*" 16ம் வசனம், நாம் தொடங்கிய சத்தியத்திற்கு நம்மைத் திரும்பவும் கொண்டுவருகிறது. எவரொருவரும் நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்க இயலாது.

நியாயத்தீர்ப்பின் சாத்தியக்கூறு பற்றிச் சிந்திக்கச் சிலர் விரும்புவதில்லை. மற்றவர்கள், மரணத்திற்குப்பின்புள்ள வாழ்வு எதைக் கொண்டிருந்தாலும், ''எல்லாம் சரியாகத் திருப்பப்படும்'' என்ற தெளிவற்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். சிலர், நியாயத்தீர்ப்பின் நாள் என்று ஒன்றிருக்க முடியாது, ''ஏனென்றால், அன்பான தேவன் எவரொருவரையும் நரகத்திற்கு அனுப்பமாட்டார்'' என்று

நம்பியிருக்கின்றனர். பிரென்ச்சுக்காரரான வால்ட்டேர்[35] என்ற தேவ நம்பிக்கையற்ற மனிதரிடத்தில் ஒருமுறை, ஏன் அவர் ஒருநாளில் தேவனைச் சந்திப்பது குறித்துக் கவலையற்றிருக்கிறார் என்று கேட்கப்பட்டது. அவர், "தேவன் மன்னிப்பார்" என்று பதிலளித்தார். அவர் எப்படி இவ்வளவு நம்பிக்கையாயிருக்க முடிந்தது என்று கேட்கப்பட்டபோது அவர், "ஏனென்றால் அதுதான் அவர் பணி" என்று பதில் அளித்தார்.[36] பலர் கர்த்தருக்கு முன்பாக நிற்கும்போது, அவர் ஒரு "சிலரை" பரலோகத்திற்கும் "பலரை" நரகத்திற்கும் அனுப்புகிறார் என்பது பலருக்குத் திகைப்பாக இருக்கும்! (மத்தேயு 7:13, 14; 25:31-34, 41, 46 ஆகிய வசனங்களைக் காணவும்.)

## முடிவுரை

நமது பாடத்தில், நாம் நியாயத்தீர்ப்பின் நாள் தப்பிக்க இயலாதது, தேவனுடைய முடிவுகள் வழக்கிட இயலாதவைகளாயிருக்கும், கர்த்தர் பட்சபாதமற்றவராயிருப்பார், மற்றும் நியாயத்தீர்ப்பு தவிர்க்க இயலாததாக இருக்கும் என்று கண்டிருக்கிறோம். மீண்டுமாக, நான் "அந்த நாளுக்கு நீங்கள் *தயாராக* இருக்கிறீர்களா?" என்று கேட்கிறேன். இந்தக்கேள்வியை நீங்கள் தீவிரமாகக் கருதினால், உங்கள் வாழ்வு எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருப்பதில்லை, உங்களுக்குத் தேவனுடைய கிருபையும் இரக்கமும் அதிகமாய்த் தேவைப்படுகிறது என்று உணர்ந்தறிவீர்கள். நீங்கள் அந்த உணர்ந்தறிதலுக்கு வந்தால், கர்த்தருடைய அன்பான கரங்களிடத்தில் ஓடிச்செல்ல இன்னொருநாள் காத்திருக்க வேண்டாம்.

மகா அலெக்சாந்தர் ஒருமுறை ஒரு நகரத்தை முற்றுகையிட்டபோது, அங்கு அவர் பெரியவிளக்கு ஒன்றை ஏற்றச் செய்தார். அவர் அதை முற்றுகையின் அடையாளமாக இரவும் பகலும் எரியச்செய்தார். அவர் அந்த நகரத்தின் மக்களுக்கு, அந்த விளக்கு எரிந்துகொண்டிருக்கும் வரையில், அவர்கள் சரணடைவதன்மூலம் தங்களைக் காத்துக்கொள்ள நேரம் உள்ளது என்று செய்தி அனுப்பினார். இருப்பினும், அந்த விளக்கு அணைக்கப்பட்டவுடன், நகரமும் அதில் உள்ள யாவரும் இரக்கமின்றி அழிக்கப்படுவார்கள்.[37] இன்றைய நாட்களில் தேவனுடைய சகிப்புத்தன்மை மற்றும் பொறுமை என்ற "விளக்கு" நீங்கள் அவரிடத்தில் வர உங்களுக்கு நேரம் கொடுத்து "பிரகாசித்துக்" கொண்டிருக்கிறது. ஒருநாளில், ஒருவேளை விரைவில், அந்த விளக்கு அணைக்கப்படும், அதன்பின்பு [நீங்கள் அவரிடத்தில் வருதல் என்பது] மிகவும் தாமதமாகி விடும். தேவனுடைய நற்தன்மை உங்களை இன்றைக்கே மனந்திரும்ப வழிநடத்துவதாக!

---

குறிப்புகள்

[1]Will L. Thompson, "There's a Great Day Coming," *Songs of the Church,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishers, 1977). [2]இந்தப்பாடத்தில் உள்ள பிரதானத்தலைப்புகளில் இரண்டு தலைப்புகள் John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today se-

ries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 82 என்ற புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டுள்ளன. ஒரு தலைப்பு D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 63 என்ற புத்தகத்தில் இருந்து வருகிறது. [3]உங்கள் உரையைக் கேட்பவர்களால் புரிந்துகொள்ளப்படுமென்றால், நீங்கள் "நமது சொந்தப் பாவங்களுக்கு நாம் வரும்போது, நாம் யாவருமே பார்வையற்ற புள்ளியைக் கொண்டுள்ளோம்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தலாம். [4]பவுல், தமது வாசகர்கள் எல்லாரும் இல்லையென்றாலும், அவர்களில் பெரும்பான்மையானவர்கள் தமது கூற்றை ஒப்புக்கொள்வார்கள் என்று யூகிக்கும்போது, "அறிந்திருக்கிறோம்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். [5]*The Interlinear Greek-English New Testament: The Nestle Greek Text with a New Literal English Translation by Alfred Marshall* (London: Samuel Bagster & Sons, 1958), 606. கர்த்தரால் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தின்படியே நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் என்று வேதாகமம் போதிக்கிறது (யோவான் 12:48ஐக் காணவும்). இருப்பினும், இவ்வசனத்தில் "சத்தியத்தின்படியே" என்பது அனேகமாக, தேவனுடைய நியாயத்தீர்ப்பு நீதியாக இருக்கும் என்ற உண்மையைக் குறிப்பிடலாம். [6]Briscoe, 58. [7]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 388. The CJB has "a mere man"; the NIrV has "only a human being." [8]இந்த விவரிப்பை உங்கள் சமூகத்திற்குப் பொருந்தும் வகையில் தழுவியமைத்துக்கொள்ளவும். [9]"... *sklērotēs* ... என்பது கடினத்தன்மையை நேரடியாகக் குறிப்பிடுகிறது மற்றும் இதிலிருந்துதான் நாம் *sclerosis* என்ற மருத்துவ வார்த்தையைப் பெறுகிறோம். Arteriosclerosis என்பது இரத்தக்குழாய்கள் கடினமாகுதலைக் குறிக்கிறது" (John MacArthur, *Romans 1-8*, The MacArthur New Testament Commentary [Chicago: Moody Press, 1991], 120). [10]"நீதியான நியாயத்தீர்ப்பு" என்பது "நீதி" என்பதற்கான கிரேக்க வார்த்தையை "நியாயத்தீர்ப்பு" என்பதற்கான வார்த்தையுடன் இணைத்துப் பெறப்பட்ட வழக்கத்திற்கு மாறான (*dikaiokrisia*) என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

[11]நீதிமொழிகள் 24:12 இதே விஷயத்தைக் கூறுகிறது, ஆனால் கேள்வி வடிவத்தில் கூறுகிறது. [12]வசனங்கள் 7ம் 8ம் வாக்கியச்சொல் எச்சங்களாக உள்ளன. இது, [அவ்வசனங்களின்] சிந்தனையை நிறைவுசெய்ய வார்த்தைகள் தரப்பட வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. இவ்விஷயத்தில், வசனம் 6ல் உள்ள "தேவன் தரவழைப்பார்" என்ற கருத்து வசனங்கள் 7, 8 ஆகியவற்றிற்குத் தரப்பட வேண்டும். [13]Stott, 84. [14]Vine, 462. [15]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 116. [16]F. Büchsel, "*eritheía*," in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 256. [17]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 75, இவ்வகைப்பட்ட தனிநபர், தனது இலக்கை அடைய. எவ்வகை முறையையும் அடிக்கடி பயன்படுத்துகிறார் என்பதால், இவ்வார்த்தை "சண்டைக்காரர்" அல்லது "கலகம் செய்பவர்" என்பதையும் அர்த்தப்படுத்தக்கூடும் என்று சில அகராதிகள் கூறுகின்றன. [18]Vine, 26. [19]Moo, 75. [20]Morris, 116.

[21]J. D. Thomas, *Romans*, The Living Word series (Austin Tex.: Sweet Publishing Co., 1965), 19. [22]MacArthur, 128. (Emphasis mine.) [23]Thomas, 19. (Emphasis mine.) [24]Vine, 17. [25]Ibid., 27. [26]Stott, 83-84. [27]பார்க்ளே என்பவர், உலகின் பல பாகங்களில்

*புரிந்துகொள்ளப்படக்கூடிய விளக்கவுரை ஒன்றை கூறியுள்ளார். "தேவனுடைய பொருளாதாரத்தில் மிகவும், ஆதரவுபெற்ற மக்களினப்பிரிவு என்று ஒன்றுமில்லை"* (William Barclay, *The Letter to the Romans,* rev. ed., The Daily Study Bible Series [Philadelphia: Westminster Press, 1975], 43). [28]*ரோமருக்கு எழுதிய நிருபத்தின் 3ம் அதிகாரத்தை நாம் படிக்கும்போது, nomos ("நியாயப்பிரமாணம்" என்பது பற்றிய வார்த்தை விளக்கபடிப்பொன்றைப் பெறுவோம்.* [29]*இப்புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படுகிற "புறஜாதியார், மனச்சாட்சி மற்றும் ஊழியப்பணி" என்ற பாடத்தில் இவ்வசனங்களின்மீதான விளக்கங்களைக் காணவும்.* [30]KJV *வேதாகமத்தில் 13 முதல் 15 வரையுள்ள வசனங்கள் அடைப்புக்குறிகளுக்குள் உள்ளன. அதே வேளையில்* NIV *வேதாகமத்தில் 14 மற்றும் 15ம் வசனங்கள் அடைப்புக்குறிகளுக்குள் உள்ளன.*[31]*"என் சுவிசேஷம்" என்பது வழக்கத்திற்கு மாறானதாக இருக்கிறது. சுவிசேஷமானது கர்த்தரால் அவரிடம் (பவுல்) ஒப்படைக்கப்பட்டபின்பு, ஒருவிதத்தில் அவர் அதைத் தமதாக்கிக் கொண்டார் என்று பவுல் அர்த்தப்படுத்தியிருக்கக்கூடும்.* [32]Briscoe, 63-64. [33]*The Interlinear Greek-English New Testament*, 608. [34] *உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான விவரிப்புகளைப் பயன்படுத்துங்கள்.*[35]*"என் சுவிசேஷத்தின்படியே" என்பது, சுவிசேஷத்தில் காணப்பட்டுள்ள சத்தியத்தின் படியே நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் என்று அர்த்தப்பட முடியும் (யோவான் 12:48), ஆனால் இது அனேகமாக, நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் என்ற உண்மையை சுவிசேஷ வரலாறு உள்ளடக்கியிருக்கிறது என்று அர்த்தப்படுவதாக இருக்கலாம்.* [36]*"வால்ட்டேர்" (1694-1778) என்பது மிகப்புகழ்பெற்ற பிரென்ச்சு எழுத்தாளரான பிரான்கோஸ் அரௌவ்ட் என்பவரது புனைபெயராகும்.* [37]Adapted from Moo, 80. *இந்தக்கூற்று ஜெர்மனியத் தத்துவ ஞானியான ஹென்ரிக் ஹேய்ஸ் (1797-1856) என்பவருக்கும் உரித்தாக்கப்பட்டுள்ளது.* [38]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Semon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 53.